பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**26 03 2026** **6 45**

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** நாடு முழுவதும் விமானப் போக்குவரத்து இணைப்பை விரைவாக விரிவுபடுத்துவதில் மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2.** பல்வேறு வளர்ச்சியடைந்த நாடுகளுடன் **9** தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

**3.** மேற்காசியாவில் நிலவும் தற்போதைய சூழலில் அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு அனைத்து எதிர்க்கட்சிகளும் ஆதரவளித்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

**4.** ரயில் தகவல் தொடர்பு உள்கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு அம்சங்களுக்காக ஆயிரத்து **200** கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு ரயில்வே அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

**5.** **20** வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

**--- இனி விரிவான செய்திகள் ---**

<<<<>>>>

நாடு முழுவதும் விமானப் போக்குவரத்து இணைப்பை விரைவாக விரிவுபடுத்துவதில் மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

உடான் திட்டத்தை அடுத்த 10 ஆண்டுகளுக்கு நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இத்திட்டத்தின் மூலம் இரண்டாவது மற்றும் 3ஆம் நிலை நகரங்களில் புதிய விமான நிலையங்களும், ஹெலிபேடுகளும் அமைக்கப்படும் என்று கூறியுள்ளார்.

இது தொலைதூரப் பகுதிகளில் வேலைவாய்ப்பு, வர்த்தகம் மற்றும் சுற்றுலாவை மேம்படுத்துவதோடு, பொருளாதார வளர்ச்சிக்கு புதிய உத்வேகம் அளிக்கும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாட்டின் 2031-35ஆம் ஆண்டுக்கான பருவநிலை திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், கரியமில வாயுவை குறைப்பதற்கான பாரிஸ் ஒப்பந்தத்தின் இலக்குகளை மேம்படுத்தும் வகையில் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

2035ஆம் ஆண்டுக்குள் கரியமில வாயு வெளியீட்டை 47 சதவீதம் அளவிற்கு குறைக்க இந்தியா உறுதிபூண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

புதை படிவமற்ற எரிபொருள் திறனை 2035ஆம் ஆண்டுக்குள் 60 சதவீதம் அதிகரிப்பதற்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<>>>>

இந்தியா பல்வேறு வளர்ச்சியடைந்த நாடுகளுடன் 9 தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்த ஒப்பந்தங்கள் உலக அளவிலான வர்த்தகத்தில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு அளவிற்கு சந்தை வாய்ப்புகளை அளிக்கும் என்று கூறினார்.

நாட்டின் தொழில்துறையினர், விவசாயிகள், குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், கைவினைஞர்கள் ஆகியோர் தரத்தில் உரிய கவனம் செலுத்துவதன் வாயிலாக இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

இந்தத் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் இந்தியப் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு குறைந்த அல்லது வரியில்லாத அளவில் உலகளாவிய சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு பயனளிக்கும் என்று அவர் கூறினார்.

பெரு நிறுவனங்கள் நிகர லாபத்தில் 5 சதவீதத்தை சமூக பொறுப்பிற்காக செலவிடுவதை பாராட்டுவதாக திரு. பியூஷ் கோயல் குறிப்பிட்டார்.

<<<<>>>>

மேற்காசியாவில் நிலவும் தற்போதைய சூழலில் அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு அனைத்து எதிர்க்கட்சிகளும் தங்களின் ஆதரவை அளித்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

மேற்காசியாவில் நிலவும் சூழல் குறித்து புதுதில்லியில் நேற்று நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

அப்போது எதிர்க்கட்சித் தலைவர்கள் எழுப்பிய அனைத்து கேள்விகளுக்கும் அரசு பதிலளித்ததாகவும், இக்கூட்டத்தில் பங்கேற்றதற்காக அனைத்துக் கட்சியினருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் திரு. கிரண் ரிஜிஜு குறிப்பிட்டார்.

<<<<>>>>

தகவல்தொடர்பு உள்கட்டமைப்பை மேம்படுத்தவும், கவாச் தானியங்கி ரயில் பாதுகாப்பு அமைப்பை பல்வேறு மண்டலங்களில் விரிவுபடுத்தவும் ரயில்வே முடிவு செய்துள்ளது.

இதற்காக ஆயிரத்து 200 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

மேம்பட்ட கண்ணாடி இழை தகவல் தொடர்பு அமைப்புகள் மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள் மூலம் ரயில்வே கட்டமைப்பை வலுப்படுத்துவதே இத்திட்டங்களின் நோக்கம் என்று ரயில்வே அமைச்சகம் கூறியுள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து குறிப்பிட்டுள்ள ரயில்வே அமைச்சகம், தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் அதிக போக்குவரத்துள்ள வழித்தடங்களில் **548** கிலோ மீட்டர் தொலைவிற்கு **300** கோடி ரூபாய்க்கும் அதிகமான செலவில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ரயில் மோதல் தவிர்ப்புக்கான புதிய கவாச் முறை பயன்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ளது.

இது முக்கிய சூழல்களில் தாமாகவே பிரேக்குகளை பயன்படுத்துவதன் மூலம் ரயில் மோதல்களைத் தடுக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும்...,

**26 03 2026 6 45 Train - Kavach-2**

... அதிகப் போக்குவரத்து மிக்க வழித்தடங்களில் இது பாதுகாப்பை மேம்படுத்தும் என்றும் ரயில்வே அமைச்சகம் கூறியுள்ளது.

*<<<<>>>>*

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசின் முயற்சிகளால் ஒவ்வொரு பழங்குடியின இளைஞரும் விளையாட்டுத் துறையில் சாதிப்பதற்கான வாய்ப்பை பெறுகின்றனர் என்று மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

சத்தீஸ்கட் மாநிலம் ராய்ப்பூரில் நாட்டின் முதலாவது கேலோ இந்தியா பழங்குடியினர் விளையாட்டுகளை நேற்று அவர் தொடங்கி வைத்தது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் வீரர்கள் இந்த கேலோ இந்தியா விளையாட்டுகள் மூலம் தயாராவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விளையாட்டுகள் தற்போது நாட்டின் கடைக்கோடி பகுதிகளை அடைந்துள்ளதாகவும், இதனை பழங்குடியின வீரர்களின் உற்சாகமான பங்கேற்பு மூலம் அறிந்துகொள்ள முடியும் என்றும் திரு. மன்சுக் மாண்டவியா குறிப்பிட்டுள்ளார்.

இந்த கேலோ இந்தியா பழங்குடியின விளையாட்டுகள் சத்தீஸ்கரின் 3 நகரங்களில் அடுத்த மாதம் 3ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் வேட்புமனு தாக்கல் வரும் **30**ஆம் தேதி தொடங்கி அடுத்த மாதம் **6**ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

இந்நிலையில் மொத்தமுள்ள **8** நாட்களில் **4** நாட்கள் மட்டுமே மனுக்களை தாக்கல் செய்ய முடியும் என்று மாநில தலைமைத் தேர்தல் தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பொது விடுமுறையாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள இம்மாதம் **31**ஆம் தேதி, அடுத்த மாதம் **1, 3** மற்றும் **5**ஆம் தேதிகளில் வேட்புமனுக்களை தாக்கல் செய்ய இயலாது என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

அமெரிக்கா முன்வைத்த **15** அம்ச பரிந்துரைகளை ஈரான் நிராகரித்துள்ளதாக அந்நாட்டு ஊடகம் தெரிவித்துள்ளது.

-------------

மியான்மரில் நேற்றிரவு ஒன்பதரை மணியளவில் லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 4 புள்ளி 5ஆக பதிவானது.

-------------

அசாம், கேரளம், புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்புமனுக்களை திரும்பப் பெற இன்று கடைசி நாளாகும்.

-------------

மகாகராஷ்டிர மாநிலத்தில் எரிபொருள் தட்டுப்பாடு ஏதும் இல்லை என்றும், அதுகுறித்த வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் அம்மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

-------------

கள்ளக்குறிச்சி அருகே திருக்கோவிலூரில் ஆவணங்களின்றி எடுத்துச் செல்லப்பட்ட ஒரு லட்சத்த 74 ஆயிரம் ரூபாயை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

-------------

திருவாரூர் மாவட்டம் நன்னிலம் அருகே சிறுமிக்கு பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் குற்றவாளிக்கு இரட்டை ஆயுள் தண்டனை விதித்து மாவட்ட மகளிர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

-------------

ஈரோடு மாவட்டம் பவானி அருகே வீட்டில் புகுந்த சாரைப் பாம்பை வளர்ப்பு நாயை தூண்டி கடிக்க வைத்து வீடியோ எடுத்து சமூக வலைதளத்தில் வெளியிட்டவருக்கு வனத்துறையினர் நான்காயிரம் ரூபாய் அபராதம் விதித்தனர்.

-------------

தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு படகு மூலம் கடத்துவதற்காக பதுக்கி வைத்திருந்த 25 லட்சம் ரூபாய் மதிப்பிலான விரலி மஞ்சள் மற்றும் பீடி இலைகளை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

-------------

காஞ்சிபுரம் கூட்டுறவு இணை பதிவாளர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற தேர்தல் விழிப்புணர்வு உறுதிமொழி நிகழ்ச்சியில் பல்வேறு தரப்பினர் கலந்துகொண்டனர்.

-------------

சென்னை மூலக்கடை, பெரம்பூர் பகுதிகளில் அதிவேகமாக ஆபத்தான முறையில் இருசக்கர வாகனங்களை ஓட்டிய 10 பேரை காவல்துறையினர் கைது செய்து அவர்களிடமிருந்து 9 வாகனங்களை பறிமுதல் செய்தனர்.

-------------

சென்னை மாவட்டத்தில் நேற்று உரிய ஆவணங்களின்றி எடுத்துச் செல்லப்பட்ட 2 லட்சத்து 36 ஆயிரம் ரூபாயை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

20 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

மாலே-யில் நடைபெறும் இப்போட்டி மாலை மணி 3.45க்கு தொடங்குகிறது.

இந்தியா தமது இரண்டாவது ஆட்டத்தில் நாளை மறுநாள் பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

--------------

இத்தாலியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கலியந்தா பூனச்சா - தாய்லாந்தின் இசாரோ இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை, 6-4, 6-3 என்ற செட் கணக்கில் நெதர்லாந்தின் Jarno Jans - செக் குடியரசின் David Poljak இணையை வென்றது.

**<<<<The End>>>>**